### இன்று தமிழ்நாடு தொழில் வளர்ச்சியில் இந்தியாவிலேயே 'நம்பர் ஒன்' மாநிலமாக மாறியிருக்கிறது!

# தப்பித்தவறி சங்கிகளிடமோ, அடிமைகளிடமோ சிக்கினால், நம் மாநிலத்தின் உரிமைகள் எல்லாம் பறிபோய்விடும்!

## மன்னார்குடி சட்டமன்றத் தொகுதி தேர்தல் பிரச்சாரத்தில் துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் எச்சரிக்கை!





மன்னார்குடி, ஏப்.15 –

**திராவிட முன்னேற்றக் கழக இளைஞர் அணிச் செயலாளரும் துணை முதலமைச்சருமான உதயநிதி ஸ்டாலின் அவர்கள் திருவாரூர் மாவட்டம், மன்னார்குடி சட்டமன்றத் தொகுதியின் திராவிட முன்னேற்றக் கழக வேட்பாளர் முனைவர் டி.ஆர்.பி.ராஜாவுக்கு உதயசூரியன் சின்னத்தில் வாக்குகள் சேகரித்து பிரச்சாரம் மேற்கொண்டார்.**

**அப்போது அவர், ``மீண்டும் அடிமைக் கூட்டத்திடமும், சங்கிகள் கூட்டத்திடமும் தமிழ்நாடு போய்விட்டது என்றால், தமிழ்நாட்டைப் பின்னோக்கி எடுத்துக்கொண்டு போய்விடுவார்கள். எல்லா உரிமைகளையும் விட்டுக்கொடுத்து விடுவார்கள். மாநில உரிமைகள் எல்லாம் போய்விடும்" என்று குறிப்பிட்டார்.**

**கழக இளைஞர் அணிச் செயலாளரும் துணை முதலமைச்சருமான உதயநிதி ஸ்டாலின் ஆற்றிய உரை வருமாறு:**

இங்கு வருகை தந்திருக்கும் உங்கள் அனைவருக்கும் முதலில் என்னுடைய நன்றியை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

நேற்று முழுவதும் திருச்சி மாவட்டத்தில் பிரச்சாரத்தில் ஈடுபட்டு, நம்முடைய கழக வேட்பாளர்களுக்கு நம்முடைய வெற்றிச் சின்னம் உதயசூரியன் சின்னத்தில் வாக்குக் கேட்டு இன்று காலையில் முதன் முதலாக திருவாரூர் மாவட்டத்திற்கு உங்களுடைய வெற்றி வேட்பாளர் சகோதரர் டி.ஆர்.பி. ராஜா அவர்களுக்கு வாக்குக் கேட்டு வந்திருக்கிறேன். நான் இன்று மன்னார்குடிக்கு வந்திருக்கிறேன்.

### உங்களில் ஒருவன்

மன்னார்குடிக்கு நான் ஒரு வெளியாள் கிடையாது, உங்களில் ஒருவனாக இன்று வந்திருக்கிறேன். கலைஞருடைய திருவாரூர் மாவட்டத்தைச் சேர்ந்தவனாக வந்திருக்கிறேன். கலைஞர் எப்போதுமே டெல்டாகாரன் என்று சொல்லுவார். நம்முடைய தலைவரும் சொல்லுவார் நான் ஒரு டெல்டாகாரன் என்று. இப்போது நானும் சொல்கிறேன், பெருமையாகச் சொல்கிறேன், நானும் ஒரு டெல்டாகாரன் என்கிற அந்தப் பெருமையோடு, உரிமையோடு உங்களையெல்லாம் சந்திக்க வந்திருக்கிறேன். இன்று நான் டெல்டாகாரன் என்று நான் சொல்வதும், நம்முடைய தலைவர் சொல்வதும் சிலருக்குப் பிடிக்கவில்லை. என்ன தெரியுமா சொல்கிறார்கள்? அவர்களெல்லாம் ஒரிஜினல் டெல்டாகாரர்கள் இல்லை என்கிறார்கள். நாங்களெல்லாம் ஒரிஜினல் டெல்டாகாரர்கள்தாம். நீங்கள்தான் ஒரிஜினல் அடிமைகள், நீங்கள் ஒரிஜினல் டெல்டாகாரர்கள் கிடையாது. அவர்களுக்கு இந்த நேரத்தில் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

சகோதரர் டி.ஆர்.பி. ராஜா அவர்களுக்கு வாக்குக் கேட்டு வந்திருக்கிறேன். ஒரு அருமையான வேட்பாளரை உங்களிடத்திலே தலைவர் ஒப்படைத்திருக்கிறார்கள். போன முறை கிட்டத்தட்ட 37,000 வாக்குகள் வித்தியாசத்தில் அவரை ஜெயிக்க வைத்து சட்டமன்றத்திற்கு அனுப்பினீர்கள், தலைவர் அவரை அமைச்சராக்கினார். இந்த முறை குறைந்தது எவ்வளவு வாக்கு வித்தியாசம்? ஒரு லட்சமா? சரி பண்ணிக்காட்டிவிடுங்கள் பார்ப்போம். செய்து காட்டுவீர்களா? குறைந்தது ஒரு லட்சம் வாக்கு வித்தியாசத்தில் ஜெயிக்க வைத்து மிகப்பெரிய வெற்றியை கொடுத்து அவரை அனுப்ப வேண்டும்.

### நான்காவது முறையாக வெற்றி

மூன்று முறை தொடர்ந்து ஹாட்ரிக் அடித்திருக்கிறார். இந்த முறை நான்காவது முறையாக அந்த வெற்றியைத் தேடிக்கொடுக்க வேண்டும். மன்னையின் செல்லப்பிள்ளை என்று கலைஞரால் அழைக்கப்பட்டவர்தான் சகோதரர் டி.ஆர்.பி.ராஜா அவர்கள். அதுமட்டுமல்ல எந்த நேரத்திலும் உங்களோடு களத்தில் இருக்கக்கூடியவர், மக்களோடு இருக்கக்கூடியவர். கஜா புயலாக இருந்தாலும் சரி, அது கொரோனா காலமாக இருந்தாலும் சரி, எப்போதும் உங்களோடு இருக்கக்கூடியவர், உங்கள் குடும்பத்தில் ஒருவராக இருக்கக்கூடியவர்தான் சகோதரர் டி.ஆர்.பி. ராஜா அவர்கள்.

இன்று தமிழ்நாடு தொழில் வளர்ச்சியில் இந்தியாவிலேயே நம்பர் ஒன் மாநிலமாக மாறியிருக்கிறது என்றால், அது முழுக்க முழுக்க அவருடைய முயற்சி. இதுவரை இல்லாத அளவுக்கு, இன்று அந்நிய முதலீடுகள் தமிழ்நாட்டை நோக்கி வருகிறது என்றால், அது முழுவதும் அவருடைய முயற்சிதான். இன்று தமிழ்நாடு முழுக்க தொழில் முதலீடுகள் வந்து நிறைய வேலைவாய்ப்புகளை உருவாக்கி கொடுத்திருக்கிறார். இதற்கெல்லாம் முக்கிய காரணமான உங்களுடைய வெற்றி வேட்பாளர் ராஜா அவர்களை அதிகமான வாக்கு வித்தியாசத்தில் ஜெயிக்க வைக்க வேண்டும். நீங்கள் ராஜாவுக்குப் போடுகின்ற ஒவ்வொரு ஓட்டும் உங்களுடைய அடுத்த தலைமுறைப் பிள்ளைகளுடைய வளர்ச்சிக்கான ஓட்டு என்பதை மனதிலே வைத்துக்கொண்டு ஓட்டுப் போடுங்கள். அதனால் உங்களையெல்லாம் உரிமையோடு கேட்கிறேன், டி.ஆர்.பி. ராஜா அவர்களைக் குறைந்தது ஒரு லட்சம் ஓட்டு வாக்கு வித்தியாசத்தில் ஜெயிக்க வைத்து இந்த முறை சட்டமன்றத்திற்கு அனுப்புங்கள்.

### துரோகக் கூட்டத்துக்கு சரியான பாடம்

அதுமட்டுமல்ல, இவரை எதிர்த்து நிற்கின்ற வேட்பாளர் யார் என்று உங்களுக்குத் தெரியும். மன்னார்குடியில் யாரை எதிர்த்து நிற்கிறார்? திரு. காமராஜ் அவர்கள் நிற்கிறார்கள். மொத்தத் துரோகக் கூட்டமும் இன்று ஒன்றாகச் சேர்ந்து ஒருவரை வேட்பாளராக்கி இருக்கிறார்கள். அவர்கள் ஆட்சியைப் பிடிக்க வேண்டும் என்று வேட்பாளர் நிறுத்தவில்லை, அ.தி.மு.க. என்கிற கட்சியைப் பிடிக்க வேண்டும் என்று வேட்பாளரை நிறுத்தி இருக்கிறார்கள். அதை மனதிலே வைத்துக் கொண்டு ஓட்டுப் போடுங்கள். அம்மையார் ஜெயலலிதாவுக்குத் துரோகம், அவர்களை அரசியலுக்குக் கொண்டு வந்த அம்மையார் சசிகலா அம்மாவுக்குத் துரோகம், இப்படி அனைவருக்குமே துரோகம் செய்யக்கூடிய ஒரு துரோகக் கூட்டத்திற்கு இந்த முறை தேர்தலில், ஒரு சரியான பாடத்தைக் கற்றுக்கொடுக்க வேண்டும்.

### மன்னார்குடி திட்டங்கள்

மன்னார்குடியில் எத்தனையோ திட்டங்களைச் சகோதரர் ராஜா அவர்கள் கொடுத்திருக்கிறார். அந்த உரிமையோடு உங்களுக்கு மீண்டும் ஒரு வாய்ப்பு கொடுங்கள் என்று கேட்க வந்திருக்கிறேன். இந்த ஐந்து வருடம் எவ்வளவு திட்டங்கள் செய்திருக்கிறார், எவ்வளவு சாதனைகளை இந்தத் தொகுதிக்குக் கொண்டு வந்திருக்கிறார், ஒரு சில சாதனைகளை மட்டும் உங்களிடம் ஞாபகப்படுத்த விரும்புகிறேன்.

47 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டு மன்னார்குடியில் ஒரு புதிய பேருந்து நிலையம் கொண்டு வந்தது யார்? உங்களுடைய வேட்பாளர்.

260 கோடி ரூபாய் மதிப்பீட்டில் பாதாள சாக்கடைத் திட்டம் கொண்டு வந்தது யார்? நம்ம ராஜா.

75 கோடி ரூபாய் மதிப்பீட்டில் முதல்வரின் கிராமச் சாலைகள் மேம்பாட்டுத் திட்டம் மூலம் இன்று 200 சாலைகள் இந்தத் தொகுதி முழுக்கச் சீரமைப்பு செய்திருக்கிறார்.

மன்னார்குடி தலைமை மருத்துவமனையில் இன்று 20 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டு புதிய ஐந்து மாடிக் கட்டிடம் கட்டப்பட்டிருக்கிறது அவருடைய சட்டமன்ற உறுப்பினர் நிதியில்.

124 கோடி ரூபாய் மதிப்பீட்டில் ரிங் ரோடு முதற்கட்டப் பணிகள் தொடங்கப்பட்டுவிட்டன.

ஆலங்கோட்டையில் 2,000 மகளிருக்கு வேலை வாய்ப்பு வழங்குகின்ற வகையில் சுமார் 50 கோடி ரூபாய் மதிப்பீட்டில் ஒரு ஜவுளிப் பூங்காவை இந்தத் தொகுதிக்குக் கொண்டு வந்திருக்கிறார்.

சுமார் 12 கோடி ரூபாய் மதிப்பீட்டில் ஒரு டிஜிட்டல் பார்க் இந்தத் தொகுதிக்குக் கொண்டு வந்திருக்கிறார்.

170 கோடி ரூபாய் மதிப்பீட்டில், நீடாமங்கலம் ரயில்வே மேம்பாலம், ரயில்வே ஓவர் பிரிட்ஜ் கொண்டு வந்துள்ளார். புதிய மகளிர் கல்லூரி

மூன்று கோடி ரூபாய் மதிப்பீட்டில் ஒரு மினி ஸ்டேடியம்,

கலைஞர் கனவு இல்லத் திட்டத்தின் மூலம் 40 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டு 1,350 வீடுகள் இந்தத் தொகுதி முழுக்கக் கட்டப்பட்டிருக்கிறது.

மூவாநல்லூரில் 22 கோடியிலும், ஆத்திக்கோட்டையில் 9 கோடியிலும் இன்று நெல் சேமிப்புக் கிடங்குகள்.

மன்னார்குடி மதுக்கூர் சாலை இன்று 24 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டு விரிவுபடுத்தப்பட்டிருக்கிறது.

மன்னார்குடி ராஜகோபாலசாமி திருக்கோவிலுக்கு இன்று 16 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டு திருக்கோவில் பணிகள் நடந்திருக்கின்றன.

இன்னும் சில கோரிக்கைகள்

வரும்போதே சொல்லிவிட்டார். அண்ணே மீண்டும் நாம்தான் ஆட்சி அமைக்கப்போகின்றோம். மீண்டும் நம் தலைவர்தான் முதலமைச்சராக போகின்றார். என் தொகுதிக்கு இன்னும் சில கோரிக்கைகள் எல்லாம் இருக்கின்றது. இந்த கோரிக்கைகளையெல்லாம் நிறைவேற்றி தரவேண்டும் என்று பேப்பர் கொடுத்து விட்டார்.

நியோ டைடல் பார்க், சிறப்பு உணவு பூங்கா அமைக்க வேண்டும்.

புதிதாக கட்டப்பட்டு வரும் மன்னார்குடி டிஜிட்டல் நூலகத்தில் அரசு தேர்வாணைய தேர்வுகளுக்கு பயிலும் மாணவ, மாணவிகளுக்கான பயிற்சி மையம்

மாவட்ட அரசு தலைமை மருத்துவமனையில் கிரிட்டிகல் கேர் பிரிவு அமைக்க வேண்டும்.

சட்டமன்ற உறுப்பினர் அலுவலகத்தில் தனியார் வேலைவாய்ப்பு சிறப்பு தகவல் மையம்

பள்ளி மாணவர்களுக்கு அறிவியல் பூங்கா அமைக்க வேண்டும்.

மின்னும் மன்னை ஸ்மார்ட் டவுன் திட்டத்தின் கீழ் நகரப்பகுதிகளை கண்காணிக்கும் வகையில் ஏஐ தொழில்நுட்பத்துடன் கண்காணிப்பு கேமரா அமைக்க வேண்டும்.

நிலத்தடி நீரில் உப்புத் தன்மை அதிகமாக இருக்கக் கூடிய கிராமங்களில் சுத்தமான தண்ணீர் வழங்க சிறப்புத் திட்டம். இந்த கோரிக்கைகளையெல்லாம் வைத்திருக்கின்றார்.

இவற்றையெல்லாம் செய்து கொடுக்க வேண்டும் என்றால், வாக்குறுதிகள் எல்லாம் நிறைவேற்ற வேண்டும் என்றால் நீங்கள் எனக்கு ஒரு வாக்குறுதி கொடுக்க வேண்டும். ஜெயிக்க வைத்துவிடுவீர்களா? ராஜாவை ஜெயிக்க வைத்துவிடுவீர்களா? அந்த வாக்குறுதியை நீங்கள் காப்பாற்றினீர்கள் என்றால், நான் உங்களுக்குக் கொடுக்கக்கூடிய வாக்குறுதி இவர் வைத்திருக்கும் அனைத்துக் கோரிக்கைகளையும் நிச்சயம் நம்முடைய முதலமைச்சருடைய பார்வைக்கு எடுத்துக் கொண்டு போய் நிச்சயம் செய்து கொடுப்பேன்.

### கட்டணமில்லாப் பேருந்து திட்டம்

இன்னும் பல்வேறு திட்டங்களைச் செய்திருக்கிறோம். கடந்த ஐந்து வருடத்தில் நம்முடைய தலைவர் சொன்ன வாக்குறுதி எல்லாம் செய்து காட்டியிருக்கிறார். உதாரணத்திற்கு இரண்டு மூன்று மட்டும் சொல்ல விரும்புகிறேன். ஆட்சிப் பொறுப்பேற்றவுடன் நம்முடைய தலைவர் போட்ட முதல் கையெழுத்து என்ன? மகளிர் கட்டணமில்லாப் பேருந்து திட்டம் அறிமுகப்படுத்தப்படும் என்று சொன்னோம். செய்து காட்டினோமா? இன்று ஒவ்வொரு மகளிரும் மாதம் மாதம் 900 ரூபாயிலிருந்து 1,000 ரூபாய் வரைக்கும் இந்த கட்டணமில்லாப் பேருந்து திட்டத்தின் மூலம் பயன்பெறுகிறார்கள், சேமிக்கிறார்கள்.

அதே மாதிரி குழந்தைகள் பள்ளிக்கூடத்திற்கு வர வேண்டும், படிக்க வேண்டும், பசியோடு படிக்கக்கூடாது என்று இன்று முதலமைச்சர் காலை உணவுத் திட்டம். 20 லட்சம் குழந்தைகள் ஒவ்வொரு நாளும் பயன்பெறுகிறார்கள்.

சரி பள்ளிக்கூடத்திற்கு வர வைத்துவிட்டோம், கல்லூரிக்கு வர வைப்போம் என்று கல்வி உதவித் தொகையாக மாதம் 1,000 ரூபாய் நம்முடைய முதலமைச்சர் வழங்குகிறார்.

சமீபத்தில் மூன்று மாதத்திற்கு முன்னால், 10 லட்சம் கல்லூரி மாணவமாணவிகளுக்கு இலவச லேப்டாப் திட்டத்தை அறிவித்து, ஒரே மாதத்தில் கொடுத்து முடித்திருக்கிறது நம்முடைய அரசு. இப்படிப் பல்வேறு திட்டங்களைச் செய்து முடித்திருக்கிறோம்.

உங்கள் அத்தனை பேருக்கும் தெரியும் கலைஞர் மகளிர் உரிமைத் தொகை திட்டம். கடந்த மூன்று வருடமாக ஒரு கோடியே 31 லட்சம் மகளிருக்கு மாதம் மாதம் 1000 ரூபாய் நம்முடைய முதலமைச்சர் அவர்கள் கொடுத்திருக்கிறார்கள். அந்தத் திட்டத்தை எப்படியாவது நிறுத்த வேண்டும் என்று அதிமுகவும், பாஜகவும் முயற்சி செய்தார்கள். தேர்தல் காரணங்காட்டி மூன்று மாதம் நிறுத்துவோம் என்று நீதிமன்றத்திற்குப் போனார்கள். ஆனால் நம்ம தலைவர் என்ன செய்தார்? "நான் 1000 ரூபாய் கொடுக்கிறதை நிறுத்துகிறாயா? இப்போது நிறுத்து பார்ப்போம்" என்று சொல்லி 5000 ரூபாய் கொடுத்தாரா இல்லையா?

ஞாபகம் வைத்துக்கொள்ளுங்கள்… பிப்ரவரி மாதம், மார்ச் மாதம், ஏப்ரல் மாதம் மூன்று மாதத்திற்குச் சேர்த்து 3000, கோடைக்காலச் சிறப்பு நிதி 2000 என்று 5000 ரூபாய் நம்முடைய முதலமைச்சர் கொடுத்தார். முதலமைச்சர் காலையில் ஆறரை மணிக்கு வங்கியில் பணம் போட்டார்.

### உதயசூரியன் சின்னம்

இப்போது அதே மாதிரி வருகின்ற 23ஆம் தேதி வாக்குச்சாவடிக்கு போய், வாக்குப்பெட்டியிலே மூன்றாவது பெயர் டி.ஆர்.பி. ராஜா என்று இருக்கும். அவர் பெயருக்கு நேராக உதயசூரியன் சின்னம் இருக்கும். அதிலே வாக்களித்து மிகப்பெரிய வாக்கு வித்தியாசத்திலே ஜெயிக்க வைத்து, வாக்குப்பெட்டியிலே மூன்றாவது பெயர், ஆனால் வாக்கு எண்ணிக்கை அன்று முதல் இடத்திற்கு டி.ஆர்.பி.ராஜாவினுடைய பெயர் வரும். நிச்சயம் செய்து கொடுப்பீர்களா?

சில வாக்குறுதிகளையும் கொடுத்திருக்கிறோம், அதையும் ஞாபகப்படுத்துகிறேன். கலைஞர் மகளிர் உரிமைத் தொகை இப்போது 1000 ரூபாய் கொடுத்துக் கொண்டிருக்கிறோம். தலைவர் வாக்குறுதி கொடுத்துவிட்டார், மீண்டும் திராவிட மாடல் 2.0 ஆட்சி அமையப்போவது உறுதி. ஆட்சி அமைந்தவுடனேயே மகளிர் உரிமைத் தொகை 1000 இல்லை, 2000 ரூபாயாக உயர்த்திக் கொடுப்பேன் என்று சொல்லியிருக்கிறோம்.

கல்வி ஊக்கத்தொகை 1000 இல்லை, 1500ஆக உயர்த்தித் தருவோம் என்று வாக்குறுதி கொடுத்திருக்கிறோம்.

முதலமைச்சர் காலை உணவுத் திட்டம் ஐந்தாம் வகுப்பு வரைக்கும் இல்லை, எட்டாம் வகுப்பு வரைக்கும் விரிவுபடுத்தப்படும் என்று வாக்குறுதி கொடுத்திருக்கிறோம்.

அதே மாதிரி முதியோர் உதவித் தொகை 1200 ரூபாய் கொடுத்துக் கொண்டிருக்கிறோம், அதை உயர்த்தி 2000 ரூபாய் தருவேன் என்று தலைவர் வாக்குறுதி கொடுத்திருக்கிறார்.

### 35 லட்சம் இலவச லேப்டாப் திட்டம்

அடுத்த ஐந்து வருடத்தில் 35 லட்சம் கல்லூரி மாணவமாணவிகளுக்கு இலவச லேப்டாப் திட்டம் கொடுக்கப்படும் என்று வாக்குறுதி கொடுத்திருக்கிறோம்.

அடுத்த ஐந்து ஆண்டுகளில் 10 லட்சம் கலைஞர் கனவு இல்லம் கட்டப்பட்டு, வீடு இல்லாதவர்களுக்கு எல்லாம் வீடு ஒதுக்கித் தரப்படும் என்று வாக்குறுதி கொடுத்திருக்கிறோம்.

எல்லாவற்றையும் விட முக்கியமான வாக்குறுதி மகளிருக்குத் தெரிந்திருக்கும். தலைவர் அவர்கள் முதலமைச்சரான உடனே அனைத்து மகளிர் கையிலும் 8000 ரூபாய் தலைவர் அவர்கள் கொடுத்துவிடுவார்கள். அந்த 8000 ரூபாயை நீங்கள் உங்கள் வீட்டுக்கு என்ன தேவையோ, என்ன மின்சாதனப் பொருட்கள் தேவையோ அதை நீங்களே முடிவு செய்து வாங்கிக் கொள்ளலாம் என்கிற அந்தத் திட்டத்தையும் அறிவித்திருக்கிறார்கள். இதெல்லாம் நடைபெற வேண்டும் என்றால் வருகின்ற சட்டமன்றத் தேர்தலில் மிகப்பெரிய வாக்கு வித்தியாசத்திலே உதயசூரியன் சின்னத்திலே வாக்களித்துச் சகோதரர் டி.ஆர்.பி. ராஜா அவர்களை ஜெயிக்க வைத்து, நீங்கள் சட்டமன்றத்திற்கு அனுப்பி வையுங்கள்.

இன்னொன்று ஞாபகம் வைத்துக்கொள்ளுங்கள், நீங்கள் ஒரு சட்டமன்ற உறுப்பினருக்கு வாக்களிக்கவில்லை, நீங்கள் ஒரு எம்.எல்.ஏ.வுக்கு வாக்களிக்கவில்லை… நிச்சயம் நீங்கள் ஜெயிக்க வைக்கப்போவது உறுதி. ராஜா அவர்கள் அமைச்சராகப் போவது உறுதி. அப்போது அவர் அமைச்சராக இருக்கும்போது என்னையும் கொஞ்சம் கண்டுக்கச் சொல்லி சொல்லுங்கள்.

### உரிமைகளுக்குக் குரல் கொடுங்கள்

நம்ம தலைவர் என்ன சொல்கிறார் ஆரம்பத்திலிருந்தே? இந்தத் தேர்தல் டெல்லி அணி Vs தமிழ்நாடு அணி. தமிழ்நாடு அணி நாம்தான். டெல்லி அணி யார்? மோடி தலைமையிலே இருக்கக்கூடிய ஒரு அடிமைக் கூட்டம்.

நான் மீண்டும், மீண்டும் சொல்கின்றேன். எடப்பாடி பழனிசாமி அவர்களே, நீங்கள் ஒரு எதிர்க்கட்சித் தலைவர், தமிழ்நாட்டைச் சேர்ந்தவர், தயவுசெய்து மோடியினுடைய அடிமையாக இருக்காதீர்கள். தமிழ்நாட்டு உரிமைகளுக்குக் குரல் கொடுங்கள். நீங்கள் முதலமைச்சராக இருக்கும்போதுதான் தமிழ்நாட்டுக்குள்ளே நீட் தேர்வு வந்தது. நீங்கள் முதலமைச்சராக இருக்கும்போதுதான் தமிழ்நாட்டுக்குள்ளே உதய் மின் திட்டத்தைக் கொண்டு வந்தார்கள். அம்மையார் ஜெயலலிதா உயிரோடு இருக்கும்போது தமிழ்நாட்டுக்குள்ளே வரவில்லை. ஏன் வரவில்லை? அந்த அம்மாவாவது கொஞ்சமாவது குரல் கொடுப்பார்கள், உரிமைக்காகக் குரல் கொடுப்பார்கள்.

### திராவிட மாடல் 2.0 ஆட்சி

இவர் ஒரு முதல்தர அடிமை. நாம் முரட்டு பக்தர்கள் பார்த்திருக்கிறோம், முரட்டுத் தொண்டர்கள் பார்த்திருக்கிறோம், எங்கேயாவது பார்த்திருக்கிறீர்களா அம்மா. ஒரு முரட்டு அடிமையை? இவர்தான் மோடியினுடைய நம்பர் ஒன் முரட்டு அடிமை என்று சொன்னேன், அதிலே கோபம் வந்துவிட்டது அவருக்கு. கண்டபடி திட்டுகிறார். செத்துப் போ என்று சொல்லிவிட்டார். என் உயிரை வாங்குகின்றான் அவன் இருந்து என்று. நான் அதைப் பற்றி எல்லாம் கவலைப்படவில்லை. அவர் நீண்ட ஆயுளோடு இருக்க வேண்டும், அவர்தான் அ.தி.மு.க.வினுடைய நிரந்தரப் பொதுச்செயலாளராகவும் இருக்க வேண்டும். அப்போதுதான் நமக்கு வசதியாக இருக்கும். அவர் இருந்து நம்முடைய தலைவருடைய திராவிட மாடல் 2.0 ஆட்சி செய்கின்ற சாதனைகளை அவர் பார்க்க வேண்டும். ஆனால் எனக்கு என்ன தெரியுமா சொன்னார்? "உதயநிதிக்கு என்ன அனுபவம் இருக்கிறது? எந்த அனுபவமுமே கிடையாது அவருக்கு" என்று சொல்லிவிட்டார். ஆமாம், எனக்கு இந்த அனுபவம் எல்லாம் கிடையாதுதான்.

பதவிக்காக, பொறுப்புக்காக யார் காலையும் போய் பிடிக்கின்ற அனுபவம் எனக்குக் கிடையாது. சங்கி கூட்டத்திடம் பயப்படுகின்ற அனுபவம் எனக்குக் கிடையாது. எப்பொழுதும் மக்களோடு மக்களாக நின்று மக்களுடைய உரிமைக்காகக் குரல் கொடுப்பவன்.

இப்போது என்ன சொல்கின்றார். ஆமாம் நான் விழுந்தேன் இப்போ என்ன? அந்த அம்மா எனக்கு பதவி கொடுத்தாங்க. பொறுப்பு கொடுத்தாங்க. நான் விழுந்தேன். நான் என்ன சொல்கின்றேன். நீங்கள் விழுந்தது தவறில்லை. விழுந்த பிறகு, நீயா என்னை முதலமைச்சர் ஆக்கினாய்? என்று அந்த அம்மாவைப் பார்த்துக் கேட்டு காலை வாரிவிட்டீர்களே. இதைத்தான் நான் சொன்னேன். இப்போது நாம் அமைதியாகி விட்டோம்.

இப்போது சசிகலா அம்மா உள்ளே போட்டிக்கு வந்துவிட்டார்கள். இப்போது அவர்கள் கேட்கிறார்கள், "அந்தத் தம்பி சொல்கிறதெல்லாம் சரிதானே? நீ காலில் விழுந்தது உண்மை தானே?" வீட்டில் ஒரு நாய்க்குட்டிக்கு நான்கு பிஸ்கட் போட்டால் கூட காலைச் சுற்றி நான்கு நாள் நன்றியாக இருக்கும். இதெல்லாம் நான் சொல்லவில்லை, அந்த அம்மா சொல்கிறார்கள்.

இப்பொழுது அந்த அம்மாவைக் கட்சியிலே சேர்த்துக்கொள்ளுங்கள் பார்ப்போம்? சேர்த்துக்கொள்ள மாட்டார். ஏன் தெரியுமா? அவர் முதல்தர துரோகி. ஜெயலலிதா அம்மா இருக்கின்ற வரைக்கும் அந்த அம்மா கால். அந்த அம்மா இறந்த பிறகு சசிகலா அம்மா கால். அந்த அம்மா சிறைக்குப் போனதற்கு அப்புறம் டி.டி.வி. தினகரன் கால். அதற்கப்புறம் என்ன ஆனது? இப்போது டெல்லிக்குப் போய் நான் மோடி காலைதான் பிடித்துக்கொண்டு தொங்குவேன் என்று தொங்குகிறார்.

இந்த அடிமைக் கூட்டத்தை இந்தத் தேர்தலோடு விரட்டி அனுப்ப வேண்டும். எடப்பாடி பழனிசாமி அவர்கள் எல்லா இடத்திலும் இரண்டு விரலைக் காட்டி ஓட்டுக் கேட்கிறாரல்லவா? நீங்கள் அவருடைய சின்னத்திற்கு ஓட்டுக் கேட்கிறார் என்று நினைத்துக்கொண்டிருக்கிறீர்களா? கிடையாது… அடுத்த முறை கூர்ந்து கவனியுங்கள், "நான் ஏற்கனவே 10 முறை தோற்றுவிட்டேன், இந்த முறை 11வது முறையாக என்னைத் தோற்கடித்து விடுங்கள்" என்றுதான் உங்களிடம் கேட்டுக்கொண்டிருக்கிறார்.

எப்படி அவர் கூட்டணி வைத்திருக்கின்றார். யார், யாரையெல்லாம் கூட்டி வந்திருக்கின்றார்? நான்கு மாதத்திற்கு முன்னர் யார், யார் என்ன சொன்னாங்க? ஞாபகம் இருக்கா?

எடப்பாடி பழனிச்சாமியோட கூட்டணி வைக்கறதுக்கு பதிலாக என் வீட்டில் நாலு முழம் கயிற்றில் தூக்கில் தொங்கி விடுவேன்னு ஒருத்தர் சொன்னார். அவரைத்தான் கூட்டணிக்கு கூட்டிகிட்டு வந்திருக்கின்றார். இந்த கூட்டணியை இந்த தேர்தலோடு அனுப்பி விடுங்கள். நீங்கள் அத்தனை பேரும் உதயசூரியன் சின்னத்தில், ராஜாவுக்கு வாக்களிக்க வேண்டும் என்று முடிவு செய்துவிட்டீர்கள்.

### சங்கிகள் கூட்டம் -அடிமைக் கூட்டம்

நம்முடைய ஒரே வேலை, ஒரே குறிக்கோள், ஒவ்வொரு வீடாக ஏறி இறங்கி ஒவ்வொரு வாக்காளரையும் சந்தித்துப் பேசுங்கள். ஏன் திமுகவுக்கு ஓட்டுப் போட வேண்டும்? ஏன் ராஜாவை ஜெயிக்க வைக்க வேண்டும்? என்னென்ன திட்டங்கள் வரும்? மீண்டும் அடிமைக் கூட்டத்திடமும், சங்கிகள் கூட்டத்திடமும் தமிழ்நாடு போய்விட்டது என்றால், தமிழ்நாட்டைப் பின்னோக்கி எடுத்துக்கொண்டு போய்விடுவார்கள். எல்லா உரிமைகளையும் விட்டுக்கொடுத்து விடுவார்கள். மாநில உரிமைகள் எல்லாம் போய்விடும் என்கிற பிரச்சாரத்தைச் செய்தீர்கள் என்றால், நிச்சயம் ஒரு லட்சம் வாக்கு வித்தியாசத்தில் ராஜா அவர்கள் ஜெயிப்பது உறுதி.

நானும் ஒரு வேட்பாளர். நான் அவ்வப்போது மறந்துவிடுகிறேன், நீங்கள்தான் ஞாபகப்படுத்துகிறீர்கள் எனக்கு. நானும் சேப்பாக்கம் திருவல்லிக்கேணி தொகுதியிலே நிற்கிறேன். இதை ஒருத்தன் சொல்கிறான். நான் சேப்பாக்கம் – திருவல்லிக்கேணின்னு ரெண்டு தொகுதியில் நிற்கிறேன்னு சொல்கிறான். அவர் மட்டும் இரண்டு தொகுதியில நிற்கலாமான்னு கேட்கிறான்.

அவனிடம் எல்லாம் பேசவே முடியாது. நான் என் தொகுதிக்கு ஒரே ஒரு நாள்தான் வாக்கு கேட்டுப் போயிருக்கிறேன். அங்கே எப்படியும் ஜெயிப்போம் என்று நம்பிக்கை இருக்கிறது. என் தொகுதியை விட்டுவிட்டு, நான் மன்னார்குடிக்கு வந்து டி.ஆர்.பி. ராஜாவுக்கு உதயசூரியன் சின்னத்தில் ஏன் வாக்கு கேட்கிறேன் என்றால், எனக்கு என் வெற்றியை விட டி.ஆர்.பி. ராஜாவினுடைய வெற்றி எனக்கு மிக மிக முக்கியம்.

உங்களையெல்லாம் அன்போடு கேட்கிறேன், பண்போடு கேட்கிறேன், பாசத்தோடு கேட்கிறேன், உரிமையோடு கேட்கிறேன், உங்கள் வீட்டுப் பிள்ளையாக இருந்து கேட்கிறேன், இன்னும் பெருமையாகச் சொல்ல வேண்டும் என்றால், தலைவருடைய மகனாக இருந்து கேட்கிறேன், டாக்டர் கலைஞருடைய பேரனாக இருந்து கேட்கிறேன்.

உதயசூரியன் சின்னத்தில் வாக்களித்து டி.ஆர்.பி.ராஜா அவர்களை அதிகமான வாக்குகள் வித்தியாசத்தில் ஜெயிக்க வைத்து சட்டமன்றத்திற்கு அனுப்புங்கள். நிச்சயம் உங்கள் தொகுதிக்கு என்னென்ன தேவையோ, என்னென்ன திட்டங்கள் தேவையோ, உங்கள் ஒவ்வொரு வீட்டுக்கும் என்னென்ன தேவையோ அதை ஒவ்வொன்றையும் அவர் கண்டிப்பாகச் செய்து கொடுப்பார் என்கிற வாக்குறுதியை நான் கொடுக்கிறேன். உங்கள் அன்புக்கு வரவேற்புக்கு நன்றி, நன்றி. வாக்களிப்பீர் உதயசூரியன்!

இவ்வாறு கழக இளைஞர் அணிச் செயலாளரும் துணை முதலமைச்சருமான உதயநிதி ஸ்டாலின் உரையாற்றினார்.